# ஈழத்து தமிழ்க்கலை இலக்கிய பண்பாட்டுத் தளத்தில் உலக மயமாதலும் உள்ளூர் மயமாதலும்

வடக்கு மாகாணப் பண்பாட்டுப்
பெருவிழா ஆய்வரங்கு
2016

வெளியீடு, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம். 2017 - 10 - 24

# ஈழத்து தமிழ்க் கலை இலக்கிய பண்பாட்டுத் தளத்தில் உலக மயமாதலும் உள்ளூர் மயமாதலும்.

வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழா ஆய்வரங்கு
கட்டுரைகளின் தொகுப்பு நூல்
2016

**வெளியீடு,**
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.
2017 - 10 - 24

# நூல் விபரம்

**ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்**

வகை: தொகுப்பு நூல் / பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வெளியீடு: பண்பாட்டலுவல்கள் திணைக்களம் / வெளியீட்டெண் :7
தாள்: 120gsm Art Mat
சரவை: திருமதி இ. பத்மராணி(க.உ), திருமதி பு.வைதேகி (அ.உ)
நூல் அளவு: A5 / பிரதிகள்: 200 / பக்கம்: 136
நூல் வடிவமைப்பு, அச்சுப் பதிப்பு: அன்றா பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.

# தமிழர் பண்பாட்டில் முத்துக் குளித்தல் தூத்துக்குடி தொடக்கம் மாந்தைவரை

கலாநிதி சண்முகராஜா ஸ்ரீகாந்தன்
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தமிழர் பண்பாட்டு பாரம்பரியமானது தொன்மையானது. தமிழர் பண்பாட்டுத் தனித்துவங்கள் பெருங்கற் பண்பாட்டு மரபிற்கு முன்னைய காலநிலைமையுடன் தொடர்புடையது. இந்தியத் துணைக் கண்டத்தில் தென்னரைப் பகுதிகளில் தமிழர் பண்பாட்டு பாரம்பரியமானது ஒரு நீண்ட நெடிய வரலாற்றுத் தன்மையினைக் கொண்டதாகக் காணப் படுகின்றது. இலக்கியங்களும். கல்வெட்டு ஆதாரங்களும் மற்றும் தொல்லியல் சான்றாதாரங்களும் இதனை வலுப்படுத்துகின்றன. இந்நிலையில் இந்த ஆய்வுக் கட்டுரையானது தமிழர் பண்பாட்டில் முத்துக்குளித்தல் தொடர்பாக ஆய்வு செய்கின்றது. முத்துக்குளித்தல் தொடர்பான ஆய்வுகள் பலதளங்களில் இடம்பெற்றிருந்தாலும் தமிழில் முத்துக் குளித்தல் தொடர்பான மானிடவியல் சார்ந்த ஆய்வுகள் மிக அருந்தலாகவேயுள்ளது. இந்நிலையில் இவ்வாய்வானது சமூக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகின்றது.

தமிழர் பண்பாடு தொடர்பாக மீட்டுருவாக்கம் செய்தலில் வேறுபட்ட வரலாற்றியல் அணுகுமுறைகளும் எண்ணக்கருக்களும் பயன்படுத் தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அரசியல், பொருளாதார, சமய, சமூக மற்றும் நிர்வாக வரலாற்றியல் அணுகு முறைகளுடன் கடல் வாணிபம் (Maritime History) தொடர்பான அணுகு முறை முதன்மையானதாக ஆய்வாளர்கள் பலரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் இவ்வாய்வானது மானிடவியல் நோக்கிலான இனவரைவியல் பகுப்பாய்வின் வழியாக முத்துக்குளித்தல் தொடர்பான தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியத்தினை தென்னிந்தியா தொடக்கம் ஈழம் வரையாக பல்வேறு தளங்களில் பகுப்பாய்வு செய்கின்றது.

இந்தியாவும் இலங்கையும் பன்னெடுங் காலமாக பண்பாட்டியல் தொடர்பினைப் பேணிவருகின்றமையினை இவ்விரண்டின் புவியில் அமைவிடமும், மனித வரலாற்று நகர்வுகளும் ஏனைய சமூக. சமய, பொருளாதார, அரசியல் கூறுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இந்தவகையில் முத்துக் குளித்தல் இவ்விரண்டு பண்பாட்டு சூழல்களுக்கும் பொதுவான வாழ்வியல் நடைமுறையாக பண்டைக் காலம் தொடக்கம் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மனிதனுடைய சமூக பண்பாட்டு வாழ்வில் இயற்கை வளத்துடனான வாழ்வு முக்கியமானது. மனிதன் தனக்குத் தேவையான உணவு முதல் கனியவளங்கள் வரையாக அனைத்தினையும் இயற்கையிலிருந்து பெற்றுக்கொண்டுள்ளான். இங்கு கடல் என்பது மிகவும் அச்சம் மற்றும் ஆபத்து நிறைந்த ஒன்றாக இருந்துள்ள போது அதனிலிருந்தும் மனிதர்கள் தங்கள் உணவினையும் கனிமங்களையும் பெற்றுள்ளனர் என்பது வரலாற்றியல் உண்மை. தொடக்க காலம் முதல் கடலிலிருந்து பெறப்பட்ட முத்து, சங்கு, சிற்பி, பாசி போன்றன மனிதனுடைய உணவுத் தேவையை மட்டுமன்றி சமூக, பொருளாதாரத் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் முத்து, சங்கு, சிற்பி போன்றன ஆபரண அலங்காரத்திற்கும் அதனைப் பெறுதல் தொடர்பான அருந்தல் தன்மையினால் பொருளாதார பண்டமாற்று அலகுக் கருவியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவற்றில் காணப்படும் அழகியல் உணர்வானது இந்தியா தவிர்ந்த ஏனைய பகுதியினரையும் கவர்ந்துள்ளமையினையும் அறியமுடிகின்றது.

மனிதப் பண்பாட்டுப் படிமலர்ச்சியில் முத்து தொடர்பான சமூக. சமய மதிப்புக்கள் முதன்மையானதாக இருந்து வந்துள்ளன. முத்தின் சமூக பண்பாட்டுப் பெறுமானம் உயர்ந்தது. இதனைப் பொக்கிசமாகவே தமிழர்கள் கருதினார்கள். ஆபரணங்களின் இளவரசி போன்ற மதிப்புடையது. மறுபுறம் இந்து பௌத்த சமய மரபுகளிடையே இது ஆத்மிக மதிப்பார்ந்த ஒன்று. உலகளாவிய நிலையில் முத்துக் குளித்தல் என்பது குறிப்பிட்ட சில மட்டுப்படுத்தப்பட்ட கடற்பகுதிகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அவற்றுள் தென்னிந்தியாவிற்கும் மன்னாருக்கும் இடைப்பட்ட கடற்பிரதேசமானது தனித்துவமானதாகவும், தரமான முத்தினை விளைவிக்கும் பகுதியாகவும் இருந்து வந்துள்ளது.

பண்டைத் தமிழ்ச் சமூகமானது சங்க காலத்திலேயே சுற்றுச் சூழமைவிற்கு ஏற்பத் தகவமைந்த வாழ்வியல் முறைகளை உருவாக்கியுள்ளது. அதன்வழித் தனித்துவமான சமூக பண்பாட்டுக் கூறுகளையும் ஏற்படுத்தியுள்ளது. தாம் வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பதற்குப் பண்டைத் தமிழரின் வாழ்வியல் முறை சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். சங்க காலத்திலேயே சமூக

வாழ்வியல் முறைகளுடன் கலை, அறிவியல், தொழில்நுட்பக் கூறுகளையும் இணைத்துத் தனித்துவமான பண்டைத் தமிழ் நாகரிகமாகச் சங்ககாலச் சமூகம் மிளிர்ந்துள்ளது.

சங்ககால மக்களின் வாழ்வினைத் திணைசார்ந்த நிலையில் ஆய்வாளர்கள் பகுத்து நோக்குவார்கள். 'திணை' எனும் சொல் நிலத்தை மட்டுமன்றி நிலத்தின் அமைப்பு, அங்கு வாழும் மக்களின் இயல்பு, அங்கு உயிர்வாழும் பறவைகள், விலங்குகள், செடிகள், கொடிகள், மரங்கள், பயிர்வகைகள், வழிபாட்டுத் தெய்வங்கள் போன்றவற்றைக் குறித்து நிற்கின்றது (பிள்ளை, 2002). அத்திணைகளை அறிஞர்கள் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என்னும் ஐந்திணைகளாகப் பாகுபடுத்தியுள்ளனர். இப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டு பி.டி.ஸ்ரீனிவாஸ ஐயங்கார் ஒரு முடிவு காண்கின்றார். இவை முறையே வேடர், இடையர், மீனவர், உழவர், கள்ளர் என்போரின் வாழ்விடங்களாகும். இவ்வாறு அமைக்கப்பட்ட ஒரு சமுதாய ஏற்பாடு தென்னிந்திய நாகரிக வளர்ச்சியின் வரலாற்றைத் தோற்றுவதாகவும் குறிப்பிடுகின்றார் (சுப்பிரமணியம், 2010).

உலகின் பழம் பெரும் தொழில் முறைகளில் மீன்பிடித்தொழில் முதன்மையான ஒன்று. இது மனித நாகரிகத்தோடு இணைந்து வளர்ந்த தொழில் முறையாக மானிடவியலாளர்களால் விவரிக்கப்படுகின்றது. பண்டைக் காலம் தொடக்கம் இன்றுவரை முத்துக்குளித்தல் என்பது கடல்சார் தொழில்வாண்மையின் ஒரு வடிவமாகவே இருந்து வருகின்றது. சங்க இலக்கியங்கள் முத்துக்குளித்தல் தொடர்பான பல்வேறுபட்ட தரவுகளைத் தந்துள்ளன. அந்தவகையில் மதுரைக்காஞ்சி (133-138), அகநானூறு (350 : 10-11) கலித்தொகை (131.22), சிலப்பதிகாரம் (56-58) போன்ற நூல்களில் இத்தரவுகள் விரவிக்கிடக்க காணலாம். இதேநேரம் இலங்கையின் மகாவம்சம் நூலிலும் முத்து தொடர்பான தரவுகளும். கௌடிலியரின் அர்த்தசாஸ்திரத்தில் முத்துக்குளிக்கும் இடம் தொடர்பான தரவுகளும் காணக்கிடைகின்றன.

சங்க இலக்கியங்களில் மீன்பிடிக்கும் நெய்தல் நில சமூகத்தவர்கள் 'பரதவர்' (பொருந. 218, சிறுபா. 159, குறுந். 304, நற். 38), மீன்வேட்டுவர் (அகம். 270:3) 'வலைஞர்' (பட்டி. 197, பெரும். 274) 'திமிலோன்' (அகம். 320:2) எனப் பல்வேறு பெயர்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர். எனினும் பரதவர் என்ற சொல்லடைவானது சங்கப்பாடல்களில் 43 இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதேநேரம் பரதர் (பெரும். 323, மது. 317) என்ற சொல்லடைவும் மிகக் குறைந்தளவில் காணப்படுகின்றது. உரையாசிரியர்கள் பலர் பரதர் என்பதற்கு பரதவர் என்றே பொருள் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் ஏனைய பெயர்களான திமிலோர், வலைஞர், மீன் வேட்டுவர் போன்றவை அங்கொன்றும் இங்கொன்றுமாக சங்கப் பாடல்களில் மிகக் குறைந்தளவில் மீனவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சங்க இலக்கியம் தொடர்பான நச்சினார்க்கினியருடைய உரையின் அடிப்படையில் சங்க இலக்கியம் சுட்டும் மீனவர்கள் தொடர்பான பெயர்களில் பரதவர் என்பது

சங்ககாலத்தில். வாழ்ந்த அனைத்து மீனவர்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட சொல்லடைவாகும். மறுபுறத்தில் சங்ககாலத்தில் வாழ்ந்த மீனவர்கள் அனைவரும் ஒரே சமூகமாக இருந்துள்ளமையினை இது புலப்படுத்துகின்றது. ஏனெனில் ஏனைய சொல்லடைவுகளான மீன் வேட்டுவர், வலைஞர், திமிலோன் போன்றவை முறையே அவர்களுடைய தொழில் சார்ந்த நிலையில் (மீனை வேட்டையாடுதல்), பயன்படுத்தும் தொழில் கருவியின் அடிப்படையில் (கொடிய முடிச்சுக்களையுடைய வலையால் மீன்பிடித்தல்), கடலில் பயன்படுத்தப்படும் மீன்பிடிக்கலத்தின் அடிப்படையில் (திமில் - படகு) அமைந்தனவாகும். அதாவது சங்க காலத்தில் மீனவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பெயர்களில் 'பரதவர்' என்ற சொல்லடைவே அவர்களுக்கான 'இடுகுறிப்பெயராகவும்' பரதவர் தவிர்ந்த ஏனையவை 'காரணப் பெயராகவும்' பயன்படுத்தப்பட்டுள்ளமை இதன் வழியே அறியமுடிகின்றது.

இன்றும் மீன்பிடிக்கும் சமூகத்தைச் சுட்டும் பெயர்கள் சிலவும் காரணப் பெயராகவே காணப்படுகின்றது. குறிப்பாக கரையார் (கரையில் வாழ்பவர்கள்), முக்குவர் (முத்தினை எடுப்பதற்கு தங்கள் மூச்சை முக்கி எடுப்பவர்கள்), பட்டினவர் (பட்டணங்களில் வாணிப நோக்கத்தோடு வாழ்ந்தவர்கள்) போன்றவர்கள் இங்கு குறிப்பிட்டத்தக்கது. இந்தவகையில் பரதவர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை தென்னிந்தியக் கடற்கரையிலும் சரி மன்னார் கடற்கரையிலும் சரி முத்துக்குளித்தலுடனும் மீன்பிடித்தலுடனும் தொடர்புடையவராக இருந்து வந்துள்ளமையினை பல்வேறு இலக்கிய ஆதாரங்களும், ஆராய்ச்சி முடிவுகளும் மற்றும் கள அவதானங்களும் வெளிப்படுத்துகின்றன. இலங்கையில் இதுவரை 'பரத' என்னும் பெயருடன் 21 எழுத்துப் பொறிப்புக்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதேநேரம் 'பரத திச' என அழைக்கப்பட்ட இவர்கள் கப்பல் தலைவர்களாகவும் பெரும் வணிகர்களாகவும் இருந்துள்ளமையினைப் புலப்படுத்துகின்றது (புஸ்பரட்ணம் 2001: 51-52).

சங்ககாலத்தில் நெய்தல் நிலக் குடிமக்களான பரதவர்கள் மீன்பிடித்தல் தொடர்பான மரபுசார் அறிவு மட்டுமின்றி முத்துக்குளித்தல், சங்கறுத்தல் போன்ற பிற தொழில்களில் அறிவுடையவராகவும் இருந்துள்ளனர். பாண்டிய நாட்டில் வாழ்ந்த இனமரபுக்குழுக்களுள் ஒருவரான இவர்கள் முத்துக்குளித்தலில் நுட்பமான அறிவுடையவராக விளங்கியுள்ளமையினை மதுரைக் காஞ்சியின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகின்றது.

"இலங்கு இரும்பரப்பின் எறிசுறா நீக்கி,
வலம்புரி மூழ்கிய வான்திமிற் பரதவர்" (அகம். 350: 10-11)

எனும் அகநானூற்றுப் பாடலடிகளும் முத்துக்குளித்தல் தொழில்பற்றி விளக்கியுள்ளன.

சங்குகளிலும் வலம்புரி, இடம்புரிச் சங்கு என்னும் இரு வகையினம் உண்டு. இடம்புரிச் சங்கு சாதாரணமாகக் கிடைக்கும். ஆனால் வலம்புரிச் சங்கு அரிதாகவே கிடைக்கும். இதனால் இச் சங்கிற்கான பெறுமதியும், மதிப்பும் அதிகமாக இருப்பதுடன் அதனை வைத்திருத்தல் தொடர்பான நம்பிக்கைகளும் அதிகமாகவே இருந்து வருகின்றன.

சங்கு, முத்துக்குளிக்கும் போது பரதவர்கள் சுறாக்கள் தங்களை வந்து தாக்காது இருக்க மந்திரம் ஓதுவர் (கனகசபை 1972). இச்செய்தியினை மார்க்கோபோல என்ற வெனிஸ் நகரப் பயணாளியின் பயணக்குறிப்பில் காணமுடியும். அதாவது 'இக் குடாக்கடலில் அளவிற் பெரிய மீன்கள் நிறைந்திருப்பதால் அவை முத்துக்குளிப்பவர்களை அடியோடு கொன்றுவிடும். இக் கேட்டினைத் தவிர்க்கும் பொருட்டு அவ்வணிகர்கள் தங்களுடன் மந்திரத்தால் வசியம் செய்யும் பலரையும் அழைத்துச் செல்வர். அவர்கள் அம்மீன்கள் மீது தாங்கள் கற்ற வித்தையை ஏவுவார்கள்' (சசிவல்லி, 1989).

கடலில் மூழ்கிச் சங்கும் முத்துக்களும் எடுத்தது போலவே பவளமும் பரதவர்களால் எடுக்கப்பட்டுள்ளன. பதிற்றுப்பத்தில் 'தாழ் அடும்பு மலைந்த புணரிவளை ஞரல, இலங்குநீர் முத்தமொடு வார்துகிர் எடுக்கும்' என்று குறிப்பிடுகின்றது. சங்க காலத்தில் 'வார்துகிர்' என்பது பவளத்தினைக் குறித்துள்ளது. மீன்கள் கடலின் மேல் வரும் ஆனால் முத்துக்களும், சங்குகளும், முத்துச்சிப்பிகளும், பவளங்களும் கடலின் ஆழத்தில் காணப்படும். அவற்றினை எடுக்க வேண்டுமாயின் கடலின் ஆழத்திற்குச் செல்லவேண்டும். அவ்வாறு செல்லும் பரதவர்களுக்கு மூச்சு அடக்கும் பயிற்சியும் ஆழ்கடலில் முத்துச்சிப்பிகளையும், சங்குகளையும் இனங்காணக்கூடிய நுட்பமான அறிதிறனும் அவசியமாகும். இவற்றுடன் சிப்பிக்குள் இருக்கும் முத்துக்களை எடுப்பதற்கும் வேண்டிய அறிவும் இன்றியமையாதனவே. இந்நிலையில் இவ்வகையான மரபார்ந்த அறிவுச் செழுமை நெய்தல் நில மக்களிடம் காணப்பட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

இந்துசமுத்திரம் என்பது வாணிபம், வர்த்தகம் என்பவற்றுக்கு அப்பால் மக்கள் பண்பாட்டிடைத் தொடர்பாடலுக்கும் அடிப்படையானது. இந்தியாவும் இலங்கையும் அண்ணளவாக 8 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் ஒரே நிலப்பரப்பால் ஆன பகுதிகள். இங்கு இடம்பெற்ற பெரும் நிலப் பிளவுகள் இவ்விரு பகுதிகளையும் இரு வேறுபட்ட பகுதிகளாகப் பிரித்துள்ளன. எனினும் அண்மைய ஆய்வுகள் பல இவ்விரு பகுதிகளும் கடலடிதளத் தொடர்புடைய பகுதிகளைக் கொண்டனவாகவே காணப்படுகின்றது என்பதனை உறுதிசெய்கின்றன. இவ்விரு கடலடி கண்டமேடைத் தொடரானது தொடக்க காலம் முதல் இப்பகுதியில் முத்துக்கள் விளையக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இப்பகுதிகளில் ஆங்கிலேயர் காலம் வரையாக முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளமையினை பல்வேறு சான்றாதாரங்கள் முன்வைக்கின்றன.

தென்னிந்தியாவின் தூத்துக்குடி முத்துக் குளித்தலுக்குப் புராதன இடமாக இருக்கும் அதேவேளை இலங்கையில் மாந்தை எனப்படும் மன்னார் வளைகுடாப் பகுதி சிறந்து காணப்பட்டது. எல்லாக் காலங்களிலும் இவ்விரண்டு பகுதிகளும் முத்துக் குளித்தல் தொழிலை ஒரே தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்படாவிட்டாலும் வரலாற்று நெடுகில் இடம்பெற்ற அரச ஆதிக்கங்களின் கீழ் இவ்விரண்டு பகுதிகளும் இருந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் உள்ள முத்துக் குளித்தல் கடற்கரையானது 15ஆம் நூற்றாண்டு வரையாக பல்வேறு மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்துள்ளன. அக்காலப்பகுதிகளில் உலகின் வேறுபட்ட பகுதிகளுடனான தொடர்புகள் வலுவான நிலையில் பேணப்பட்டு வந்துள்ளமையினை வரலாற்றுச் சான்றாதாரங்களின் வழியாக அறியமுடிகின்றது.

இலங்கையின் மத்திய கால வரலாற்றுக் காலகட்டத்தில் முத்துக்குளித்தல் என்பது சிறப்பாக இருந்துள்ளது. முத்துவணிகத்தில் ஈடுபட்ட அரேபியர்கள் தென்னிந்தியா இலங்கைக்கு முத்துக்குளித்தல் தொடர்பான விருத்திக்குப் பங்களித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கிறீஸ் நாட்டைச் சேர்ந்த தூதுவர் சந்திர குப்த அரசுக்கு கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் எழுதிய குறிப்பில் இலங்கையானது இந்தியாவை விட அதிகமான முத்து விளைவிக்கும் இடமாக உள்ளது என்ற குறிப்புக் காணப்படுகின்றது. இலங்கையின் வடக்கு மற்றும் வடமேற்கு கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த மீனவ சமூகமானது அடிப்படையில் சங்கு, முத்து குளித்தலுடன் தொடர்புடையவர்களாக இருந்துள்ளனர். மேலும் முத்துக்களை சிப்பியிலிருந்து துப்பரவுசெய்து எடுக்கும் தொழிலில் ஈடுபட்ட மக்களும் அங்கு வாழ்ந்துள்ளனர். இதனை இராசநாயகம் தன்னுடைய குறிப்பில் களனி திசவுடைய காலத்தில் ஏற்பட்ட கடல்மட்ட உயர்வு காரணமாக 400 முத்துக்குளிப்போர் கிராமங்கள் கடலில் மூழ்கியதாகக் குறிப்பிட்டுள்ளார். சில தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் முத்துக்குளித்தல் என்பது கிட்டத்தட்ட 5 அல்லது 6 ஆயிரம் வருடங் களுக்கு முற்பட்ட பழைமையானது எனக் கூறுகின்றன (சிவசுப்பிரமணியம் 2012: 9-10).

முத்து விளைவு என்பது சுற்றுச்சூழலியல் அணுகுமுறையின் வழி அமையப்பெற்றது. 4 தொடக்கம் 12 கடல் ஆழம் கொண்ட பகுதிகளில் முத்துவிளைவு இடம்பெறும். இதனை வெளிக்கொண்டு வருதல் என்பது நுட்பமான செயன்முறை வழிப்பட்டது. அதாவது முக்கி மூழ்குதல், கடலடி ஆழத்தில் முத்துக்களைச் சேகரித்தல், படகுக்கு கொண்டு வருதல், அவற்றை கரைசேர்த்தல், துப்பரவு செய்தல், தரம் பிரித்தல் என வேறுபட்ட செயன்முறைகளை உள்ளடக்கியது. பொதுவாக முத்துக் குளித்தல் என்பது நெருங்கிய உறவுக் குழுச் செயற்பாட்டுடன் தொடர்புடையது.

தொடக்க காலத்தில் முத்துக்குளித்தல் தொடர்பான செயன்முறைகள் பற்றிய தகவல்கள் தெளிவாகக் கிடைக்கப் பெறாத போதும் பிற்பட்ட காலங்களில் வந்த பயணக்குறிப்புக்களில் விரிவான செய்திகள் இடம்பெறக் காணலாம். சாவ் ஜ/-குவா

(1225 கி.பி.), மார்க்கோபோலோ (1260 -1300 கிபி) போன்றவர்களின் குறிப்புக்கள் கவனத்திற்குரியன.

முத்துக்குளித்தல் என்பது பொதுவாக பங்குனி மாதம் தொடக்கம் வைகாசி மாதம் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் நடைபெறுகின்றது. முத்துக்குளித்தலுக்கு முன்னர் முத்துத் தளங்கள் தொடர்பான களாய்வுகள் மேற்கொள்ளப்படும். சிறந்த நுட்பமான அறிவுடைய ஒருவர் சிறந்த முத்துச் சிற்பிகள் காணப்படுகின்றனவா? என தேடுதல் செய்வார். சிலசமயங்கள் ஏழு அல்லது எட்டு படகுகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படும். ஆயிரத்திற்கு மேற்பட்ட சிற்பிகள் கொண்டுவரப்பட்டு அதனுடைய தரம், தன்மைகள் ஆய்வு செய்யப்படும். அதனடிப்படையிலேயே முத்து விளைவு தொடர்பாகவும் முத்துக் குளித்தல் தொடர்பாகவும் தீர்மானிக்கப்படும்.

முத்துக்களின் விளைவுகள் இடம்பெற்றிருந்தால் மக்களுக்கு அறிவித்து முத்துக் குளித்தல் செயன்முறை இடம்பெறும். கடற்கரையில் ஒரு பகுதி தெரிவு செய்யப்பட்டு அங்கே முத்துச் சிற்பிகளைப் பாதுகாப்பதற்கான தற்காலிக குடில்கள் அமைக்கப்படும். இது வேறுபட்ட பெயர்களினால் குறிப்பிடப்படுகின்றது. பெரிய படகுகளும் சிறிய படகுகளும் முத்துக்குளித்தலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில சமயங்களில் பெரிய படகுகளில் சென்று அதனை முத்து தளங்களில் நங்கூரமிட்ட பின்னர் சிறிய படகுகளில் சிறுசிறு குழுக்களாகச் சென்று முத்துக் குளித்துள்ளமை தொடர்பான குறிப்புக் களை மார்க்கோபோலா தன்னுடைய குறிப்பில் பதிவு செய்துள்ளார். வேறுபட்ட ஆய்வாளர்கள் முத்துக்குளித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகுகளின் எண்ணிக்கை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அந்தவகையில் பிரையர் (1323-1330 கி.பி) மன்னார் வளை குடாவில் 8000 படகுகள் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அதே நேரம் பெட்ரோ (1568 கிபி) அவர்கள் 400 தொடக்கம் 500 படகுகள் முத்துக் குளித்தல் செயன்முறையில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இப் படகுகளின் எண்ணிக்கை என்பது குறிப்பிட்ட பிரதேசத்தில் நிலவும் முத்து வளக் கிடைப்பனவுடன் தொடர்புடையது.

தொடக்க காலம் முதல் முத்துக்குளித்தல் செயன்முறையில் மன்னாரிலும் சரி தூத்துக்குடியிலும் சரி பரதவர் குலமக்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். எனினும் கன்னியாகுமரி. மற்றும் யாழ்ப்பாணத்திலும் முக்குவர் எனும் மக்கள் கூட்டத்தினர் முத்துக்குளித்தல் செயன்முறையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். 1694 ஆம் ஆண்டு இலங்கையில் 5524 பேர் முத்துக் குளித்தலில் ஈடுபட்டு இருந்தனர் என்றும் இன்னும் சிலபதிவுகளில் இது 8643 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது (அதியமான் 2000: 42). உண்மையில் தொடக்க காலத்தில் இந்துக்களாக இருந்த பரதவர்கள் காலப்போக்கில் போர்த்துக்கேயரின் வருகையுடன் பெருமளவு கிறிஸ்தவர்களாகவும், அரேபியர்களின் தொடர்பின் வழியாக முஸ்லிம்களாகவும் இருந்துள்ளமையினை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர் (டெக்லா 2008).

முத்துக்குளிப்போர் பொதுவாக இரவு நேரத்தில் கடற்கரையிலிருந்து தங்கள் பயணத்தினை ஆரம்பிப்பார்கள். சிலவேளைகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கடற்கரைக்கு வந்து அவர்களை வழியனுப்பி வைப்பார்கள். ஒரு சிரேஸ்ட தலைவனின் (அடப்பெனார்) வழிகாட்டலின் கீழ் முத்துக்குளிப்போர் வேறு படகுகளில் செல்வார்கள். அதிகாலையில் முத்துப் படுக்கைக்கு அருகில் நங்கூரமிட்ட பின்னர் குறைந்தது ஐந்து அல்லது 12 பேர்கள் வரையாக சிறிய படகுகளில் சென்று முத்துக் குளிப்பார்கள். முத்துக்குளிக்கும் ஒவ்வொரு படகிலும் நிறை உடைய கல், முத்துக்களைச் சேகரிக்கக் கூடிய பறி எனப்படும் பை, கயிறு என்பன காணப்படும். ஒரு கயிற்றினை முத்துக்குளிப்பவர் தனது இடுப்பில் கட்டியிருக்க அதன் மறுமுனை படகில் உள்ளவரின் கைகளில் இருக்கும். முத்துக்குளிப்பவர் கழுத்தில் முத்து சேகரிக்கப் பயன்படும் பை வலுவாகக் கட்டப்பட்டிருக்கும். முத்துக்குளிப்பவர் கயிற்றில் கட்டப்பட்ட கல்லை கடலுக்குள் போட்டவுடன் தானும் குதித்து அக்கல்லில் தன்னுடைய காலை வைத்துக் கொண்டு வேகமாகக் கடலடிக்குச் செல்வார். அங்கு சென்றவர் உடனடியாக முத்துக்களையுடை சிற்பிகளைச் சேகரித்தவுடன் தன் இடுப்பில் கட்டிய கயிற்றினை அசைப்பார். இலங்கையில். இக்கயிற்றினை 'மண்டக்கயிறு' என்பர். ஈழத்து நாவல்களில் மீனவ சமூகக் களங்களில் உருவான நாவலான 'உப்புக்காற்று' (கலையார்வன் 2012) எனும் நாவலில் இதனைப் பற்றிய தகவல்கள் காணப்படுகின்றது. அக்கயிற்றினை படகில் வைத்திருப்பவர் கயிறு அசைக்கும் சமிக்கையை உணர்ந்தவுடன் அதனை மிக வேகமாக மேல் இழுப்பர். அக்கயிற்றினைப் பிடித்துக்கொண்டு முத்துக்குளிப்பவர் மேல்வந்து படகில் தான் கொண்டுவந்த முத்துச் சிற்பிகளைப் போட்டுவிட்டு சிறிது நேரம் ஓய்வெடுத்துவிட்டு மீண்டும் முத்துக் குளிக்கச் செல்வார் (அதியமான் 2000: 49-50).

முத்துக் குளிக்க ஒருவர் கடலில் செலவிடும் நேரமானது ஒரு நிமிடம் முதல் ஐந்து அல்லது ஆறு நிமிடம் வரை அமைவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். உண்மையில் இது முத்துக் குளிப்போரின் மூச்சை அடக்கும் திறன், உடல் ஆரோக்கியம் என்பவற்றுடன் தொடர்புடையது. தென்னிந்தியாவில் ஆய்வு மேற்கொண்ட கல்பனா ராம் (1991) என்பவர் முத்து எடுக்க மூழ்கின்றவருக்கும் படகில் கயிறைக் கையில் வைத்திருப்பவருக்கும் இடையிலான உறவுமுறை தொடர்பாகக் குறிப்பிடும் போது இருவரும் மச்சான் முறை உடையவர்களாவே அதிகம் இருப்பார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் கடலில் மூழ்குபவர் எப்போதும் கயிற்றினை தன்னுடைய மனைவியின் சகோதரனிடமே கொடுப்பார். இன்றும் இலங்கையின் வடபகுதிகளில் குறிப்பாக மன்னார் போன்ற பகுதிகளில் மனைவியின் சகோதரனை 'மண்டக்கயிறு' என அழைக்கும் வழக்கம் நிலவுகின்றமையினை கள ஆய்வின் போது அறியமுடிந்தது. ஏனெனில் அவர் தன்னுடைய உயிரைக் காப்பாற்றுவார் எனும் நம்பிக்கை ஆகும். உண்மையில் சகோதரியின் கணவனுக்கு உயிராபத்து நிகழ்ந்தால் தங்கையைக் காப்பாற்ற வேண்டியது சகோதரனின் கடமை. மறுபுறத்தில் சில சமயங்களில் முத்துக்குளிப்பவர் சுறா போன்றவற்றினால் இறக்க

நேரிட்டாலும் அவர் எடுத்த முத்துக்களைக் கொண்டு தனது மனைவியைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் ஆகும்.

கடலில் சேகரிக்கப்பட்ட முத்துடன் கூடிய சிற்பிகளிலிருந்து முத்துக்களை எடுத்தல் என்பது ஒரு நீண்ட செயன்முறையினை உள்ளடக்கியது. அதாவது பெறப்பட்ட சிற்பிகளில் உள்ள தசைப்பகுதிகள் அழுகி விலகும் வரையாக ஒரு மாதத்திற்கு மேல் காயவிடுவார்கள். இதன் காலப்பகுதியில் கடற்கரையில் ஒருவிதமான மணம் ஏற்படும். சிற்பிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட முத்தான அதன் அளவு, பளபளப்பு என்பவற்றின் அடிப்படையில் தரம் பிரிக்கப்படும். முத்துக்குளித்தல் தொடர்பான கட்டுப்பாடுகளை தொடக்க காலங்களில் மன்னர் தங்கள் வசம் கொண்டிருந்தார்கள். தொடக்கத்தில் பாண்டிய மன்னர்களும் அவர்களைத் தொடர்ந்து சோழர்களும் முத்துக் குளித்தல் தொடர்பான விதிகளையும் கட்டுப்பாடுகளையும் பேணிவந்துள்ளனர். ஒவ்வொரு முத்துக்குளிப்போரும் தாம் எடுக்கும் முத்தில் ஒரு பகுதியினை அரசருக்குக் கொடுக்க வேண்டும் என்பது நடைமுறையாக இருந்துள்ளது. எடுத்துக்காட்டாக பாண்டிய மன்னனான நெடுஞ்செழியன் கொற்கைத் துறைமுகத்தினை தனது கட்டுப்பாட்டில் கொண்டு முத்துக்குளித்தல் செயற்பாட்டை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்துள்ளான். இவ்வாறே சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கன் (1070 -1120 கி.பி) தென்னிந்தியப் பகுதிகள் பலவற்றை வெற்றிகொண்டு முத்துக் குளித்தலை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளான்.

சோழ அரசர்களைத் தொடர்ந்த நாயக்கர்களும் அவர்களைத் தொடர்ந்து போர்த்துக் கீசர்களும் தூத்துக்குடி தொடக்கம் மாந்தை வரையான முத்துக் குளித்தலை தங்களுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்கள். போர்த்துக்கீசர்கள் வேறுபட்ட நடைமுறைகளின் (வரி அறிவிடல்) வழியாக முத்துக்குளித்தல் தொடர்பான பல்வேறு கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தனர். அவற்றுள் ஒன்று கல் பணம் (Stone Money). இவ் நடைமுறையானது ஒல்லாந்தர்கள் இப்பகுதிகளை தங்களுடைய காலனித்துவத்திற்குக் கொண்டு வரும்வரை நடைமுறையில் இருந்துள்ளது. ஒல்லாந்தரைத் தொடர்ந்து ஆங்கிலேயர்களும் இப்பிராந்தியங்களை தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட காலத்தில் முத்துக்குளித்தல் தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குபடுத்தினார்கள். ஆங்கிலேயர்களுடைய காலத்தில் நவீன கருவிகள் மற்றும் பயிற்சிகளுடன் இணைந்த வகையில் முத்துக்குளித்தல் இடம்பெற்றது. எனினும் பெறப்பட்ட முத்துக்களின் அளவு குறைவடைந்து சென்றுள்ளமையினால் முத்துக் குளித்தல் தொழிலானது வழக்கற்றுப் போக சங்கு போன்ற ஏனைய கடற் கனிம வளங்கள் தொடர்பான செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன (சிவசுப்பிரமணியம் 2012:18-21).

தமிழர் பண்பாட்டு மரபில் இயற்கையுடன் இணைந்த தொழில் முயற்சியாக முத்துக் குளித்தல் பண்டைய காலம் தொடக்கம் இருந்து வந்துள்ளது. புவியியல் அடிப்படையில் இரண்டு வேறுபட்ட பகுதிகளைக் கொண்ட இந்தியாவும் இலங்கையும் பிரித்தானியர் காலம் வரையாக முத்துக்குளித்தல் தொடர்பான செயற்பாடுகளில் அதிகமான காலப்பகுதியில் ஒரே கட்டுப்பாட்டின் கீழ் இருந்துள்ளமையினை அறியமுடிகின்றது. இன்று வரையாக மன்னாரின் பல பகுதிகளில் வாழும் மக்கள் தங்களுடைய உறவினர்களை இந்தியாவின் தூத்துக்குடி, இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக முத்தலிப்பு துறையில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வின் (2012) போது அங்குள்ள 10இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தூத்துக்குடியில் தங்களுடைய சொந்த உறவினர்கள் வசிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். மன்னார் பிரதேசத்திலுள்ள 'அரிப்பு' என்ற ஊரின் இடப்பெயர் ஆய்வில் 'முத்துக்களைக் கடலிலிருந்து எடுத்தவுடன் அரித்து வேறுபடுத்திய இடமாதலால் இப்பெயர் உருவானது என தணிகாசலம் அவர்கள் குறிப்பிடுகின்றார் (1992: 171). இந்தவகையில் முத்துக்குளித்தல் என்பது பண்பாட்டு தனித்துவமான மரபாக இருந்து வந்துள்ளமையினை அறியமுடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1) கலையார்வன், கு. 2012. உப்புக்காற்று. யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்ரர்.

2) சங்க இலக்கியம் பத்துப்பாட்டு: மூலமும் உரையும் பகுதி 1 – 2. 2004. வி. நாகராசன் (உரையாசிரியர்). சென்னை: நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்.

3) சங்க இலக்கியம் எட்டுத்தொகை: மூலமும் தெளிவுரையும் தொகுதி 1 – 3. 2004. ச.வே. சுப்பிரமணியன் (உரையாசிரியர்). சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

4) சசிவல்லி, வி.சி. 1989. பண்டைத் தமிழர் தொழில்கள். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

5) சீனிவாச ஐயங்கார், பி. டி. 2007. தமிழர் வரலாறு (கிபி 600 வரை) மொழிபெயர்ப்பு, பி.இராமநாதன், சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

6) சுப்பிரமணியன், ந. 2010. சங்ககால வாழ்வியல்: சங்கத் தமிழரின் அரசு முறையும் சமூக வாழ்வும் (திருத்திய பதிப்பு). சென்னை: நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்.

7) தணிகாசலம், க. 1992. தமிழர் வரலாறும் இடப்பெயர் ஆய்வும். சென்னை: சரவணா பதிப்பகம்.

8) பிள்ளை, கே. கே. 2002. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

9) புஸ்பரட்ணம், ப. 2001. இலங்கைத் தமிழர்களின் பண்டைக்கால நாணயங்கள். யாழ்ப்பாணம்: பவானி பதிப்பகம்.

10) Kanakasabhai, V. 1979 (1904). The Tamils Eighteen Hundred Years Ago. New Delhi: Asian Educational Services.

11) Decla, S. 2008. The Portuguese on the Pearl Fishery Coast. Chennai: Chuvadi.

12) Ram, Kalpana. 1991. Mukkuvar Women: Gender, Hegemony and Capitalist Transformation in South Indian Fishing Community. New Delhi: Kali for Women.

13) Sivasubramaniam, K. 2012. Fisheries in Sri Lanka: Anthropological and Biological Aspects, Volume 2: Pearl Oyster, Chank and Other Fisheries in Sri Lanka. Colombo-Chennai: Kumaran Book House.